மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பத்பநாபபுரம்.

முன்னிலை .. திரு.A.மருதுபாண்டி, பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பத்பநாபபுரம்.

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ஆம் தேதி சனிக்கிழமை

**<u>நிறைவேற்று மனு எண். 17 / 2021</u>**
**<u>in</u>**
**<u>அசல் வழக்கு எண். 240 / 2009</u>**

1. சோபா
2. அனீபா
(2–ஆம் மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் இளவர் என்பதால் அவருக்காக அவரது அடுத்த நண்பர்/தாயார் 1–ஆம் மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்/வாதி

... தீர்ப்பாணை பெற்றவர்கள்/ வாதிகள்

/எதிர்/

டென்னீஸ்

... தீர்ப்புகடனாளி/பிரதிவாதி

*****

இவ்வழக்கு 10.09.2022 அன்று என் முன் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.N.பிஜு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஸ்டீபன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் நிறைவேற்று மனு, தீர்ப்புக்கடனாளிக்கு உரிமைப்பட்ட நிறைவேற்று மனு சொத்தாக காட்டப்பட்டுள்ள வழக்கு பட்டிகை சொத்தை பற்றுகை செய்து நீதிமன்றத்தின் மூலம் ஏலத்திற்கு கொண்டுவர உத்தரவு கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் பராமரிப்பு தொகை வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு கடந்த 07.07.2010 அன்று மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி மேல்முறையீட்டு வழக்கு எண்.111/2011 வழக்கை தாக்கல் செய்தார். மேற்படி மேல்முறையீடு கடந்த 11.08.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் நிறைவேற்று மனு எண்.52/2012 மற்றும் 14/2019 என மனுக்கள் தாக்கல் செய்து மேற்படி மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி மாத பராமரிப்பு தொகையை செலுத்தியதாகும். தவிர, அதன் பிற்பாடு எந்த தொகையையும் செலுத்தவில்லை. அதனால் மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட மனு தவசி சொத்தை பற்றுகை செய்து ஏலத்தீர்ப்புக்கு கொண்டு வந்து விற்பனை செய்து தீர்ப்பாணை தொகையை ஈட்டி தர மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறைவேற்று மனு அனுமதிக்கத்தக்கதாகும்.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்</u> : –

மனுவில் மனுதாரர் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. இந்த பிரதிவாதி மேற்கண்ட வழக்கில் ஆணையை மீறவில்லை. தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைப்படி செலுத்த வேண்டிய பராமரிப்பு தொகையை தீர்ப்புகடனாளி/பிரதிவாதி செலுத்திவிட்டார். தீர்ப்புகடனாளி/பிரதிவாதி ஒப்பந்தக்காரர் என்பது பொய். மேலும் அவர் எந்தவித தொழிலும் செய்யவில்லை. மேலும் மேற்படியாருக்கு கிடைக்கக்கூடிய சிறிய வருமானத்தில் வாழ்ந்து வருகிறார். மேற்படியார் ஏற்கனவே தீர்ப்பாணை பெற்றவர்/வாதிக்கு மிகப்பெரிய தொகையை கொடுத்து ஈடு செய்துவிட்டார்.எனவே இந்நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

4. தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் இந்நிறைவேற்று மனுவில் கோரியுள்ளவாறு தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி தீர்ப்பாணையை மீறியதற்காக மனுவில் குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்தை ஜப்தி செய்து ஏலத்தில் விட உத்தரவிடத்தக்கதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

5. இரு தரப்பிலும் வாதிடப்பட்டது. வழக்கு கோப்பு மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் பராமரிப்பு தொகை வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கு கடந்த 07.07.2010 அன்று தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகும்.

**6.** மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி மேல்முறையீட்டு வழக்கு எண்.111/2011–ஐ செய்தார் என்றும், மேற்படி மேல்முறையீடு கடந்த 11.08.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் நிறைவேற்று மனு எண்.52/2012 மற்றும் 14/2019 என தாக்கல் செய்து மேற்படி மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி மாத பராமரிப்பு தொகையை செலுத்தியதாகும். தவிர, அதன் பிறகு, எந்த தொகையையும் செலுத்தவில்லை என்றும், அதனால் மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்தை பற்றுகை செய்து ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து தீர்ப்பாணை தொகையை ஈட்டி தர வேண்டுமென்று வாதிடப்பட்டது.

**7.** தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைப்படி செலுத்த வேண்டிய பராமரிப்பு தொகையை தீர்ப்புகடனாளி/பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றும், மேலும் தீர்ப்புகடனாளி/பிரதிவாதி ஒப்பந்தக்காரர் என்பது பொய் என்றும், மேலும் அவர் எந்தவித தொழிலும் செய்யவில்லை என்றும், மேலும் மேற்படியாருக்கு கிடைக்கக்கூடிய சிறிய வருமானத்தில் வாழ்ந்து வருகிறார் என்றும், மேலும் மேற்படியார் ஏற்கனவே தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு, தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி மிகப்பெரிய தொகையை கொடுத்து ஈடு செய்துவிட்டார் என்றும், ஆகையால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டார்கள்.

**8.** தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள்அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி மேற்படியார்களுக்கு சரி செய்ய வேண்டிய மொத்த பராமரிப்பு தொகையை செலுத்தவில்லை என்றும், அதனால் தீர்ப்புகடனாளி/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு திபசில் சொத்தை பற்றுகை

செய்து ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து தீர்ப்பாணை தொகையை ஈட்டி தர வேண்டுமென்று கோரியுள்ளார்கள். தவிர மனு தபசில் சொத்தானது தீர்ப்பு கடனாளி/பிரதிவாதிக்குத்தான் பாத்தியப்பட்டது என்று கூற தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் தரப்பில் "ஒரு சிறிய துண்டு தாள் கூட" முன்னிலைப்படுத்த தவறிவிட்டார்கள். எனவே, மேற்படி சூழ்நிலையில் மனு தபசில் சொத்தானது தீர்ப்பு கடனாளி/பிரதிவாதிக்குத்தான் பாத்தியப்பட்டது என்று முடிவு செய்ய இயலாததால் தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் கோரிய பரிகாரம் மேற்படியார்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. **<u>இறுதி முடிவு</u> :-**

முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தாரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பத்பநாபபுரம்.

<u>தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் தரப்பு</u>
<u>சாட்சிகள் சான்றாவணங்கள்</u> : -
- இல்லை -

<u>தீர்ப்புக்கடனாளி/பிரதிவாதி தரப்பு</u>
<u>சாட்சி & சான்றாவணங்கள் </u>: -
- இல்லை -

மா.உ.நீ.,
பத்மநாபபுரம்.

மா.உ.நீ., பத்மநாபபுரம்.

<u>சீரான / வரைவு உத்தரவு</u>:

<u>நி.ம.எண்.17/2021</u>
<u>அ.வ.எண்.240/2009</u>
தேதி:10.09.2022.